25.06.2025

O.S.No. 239/2021

PW2– அய்யாத்துரை– த/பெ. இருளப்பத்தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.06.2025

குறுக்கு விசாரணை : (பிரதிவாதி தரப்பில்)

1. நான் தெற்கு பிள்ளையார் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான்.

2. தாவா சொத்திற்கும், நான் குடியிருக்கும் வீட்டிற்கும் சுமார் 1 கி.மீ.க்குள் இருக்கும்.

3. வாதியின் மனைவி யாரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கினார் என்ற விவரம் தெரியாது. எந்த தேதியில் வாங்கினார் என்ற விவரமும் தெரியாது.

4. தாவா சொத்தின் புல எண்ணோ, வாதியின் மனைவி வாங்கிய மொத்த விஸ்தீரணமோ எனக்கு தெரியாது.

5. வாதிக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது.

6. முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் வாதியால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

7. தாவா சொத்து சுப்பிரமணியன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

8. சுப்பிரமணியனிடம் இருந்து வாதியின் மனைவி இன்றிலிருந்து சுமார் 10 வருடத்திற்கு முன்பு சுமார் 5 செண்ட் நிலம் கிரையம் வாங்கியவிவரமும் எனக்கு தெரியாது.

9. தாவா சொத்து தென்மேற்கு மூலையில் இந்த பிரதிவாதிக்கு சொத்து உள்ள விவரம் எனக்கு தெரியும். இன்றுவரை அது பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்துவருகிறது.

10. நீதிமன்றத்தில் இருந்து எனக்கு எந்த அழைப்பாணையும் வரவில்லை. நான் வாதிக்காக வாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

11. பிரதிவாதியின் வீடும் நான் வசிக்கும் தெருவில் தான் உள்ளது என்றால் சரிதான்.

12. எனக்கும், பிரதிவாதிக்கும் எங்கள் வீட்டின் நடுவில் உள்ள இடம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளதால் அவருக்கு எதிராக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

14. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் மனைவி கணபதியம்மாளுக்கும், முன்உரிமையாளரான சுப்பிரமணியனுக்கும் முன்வழக்கு இருந்த விவரமும் எனக்கு தெரியாது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.